1975 நவம்பர் 11]

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: உயிரிழந்த அந்த வாலிபன் ஒருவனே தன்னுடைய குடும்பத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தி வந்திருக்கிறான். அவர்களுக்கு வேறு உதவியும் இல்லை. ஆகையால் அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து உதவித்தொகை கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா? தீபாவளி சமயத்தில் மதுரையில் சேலைகள் பரிசு வாங்கச் சென்று உயிர் இழந்த 19 பேர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அது போன்று இதற்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஏற்கெனவே வேறு ஒரு அவையில் விளக்கம் அளித்திருக்கிறேன். வேறு எந்த ஒரு இலாகாவும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில், யார் இறந்தாலும், அவர்களுக்கு அரசு நிறுவனத்திலிருந்து, அல்லது துறைகளிலிருந்து தொகை வழங்கப்படாமல் இருக்கும்போது, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை அளிக்கப்படுகிறது. அவ்வாறு பொறுப்பு ஏற்றுக்கொண்டு நிதி வழங்கப்படுமென்ற நிலையில் அரசுத் துறைகள் அல்லது நிறுவனங்கள் இருக்குமானால், அப்போது முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுவதில்லை. யாரும் பொறுப்பேற்றுக்கொள்ளாத சூழ்நிலையில்தான் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம்: பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், இன்றுகூட சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் பகுதியிலே பஸ் விபத்து நடந்து, உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர் அவர்கள்கூட அங்கு போய் நேரில் பார்த்து வந்திருக்கிறார்கள். அதுபற்றி ஆய்வுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதுபற்றிய விவர அறிக்கை இந்த அவையிலே வைக்கப்படவிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, I wanted to ask the same question about the Central Station accident this morning.

Pension to Retired Employees of Chatram Department, Thanjavur district.

* 114. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether it is a fact, that arrears of pension due to the retired employees of the Chatram Department, Thanjavur

district, have not yet been disbursed to them as per G.O. Ms. No. 1714, Revenue, dated 19th April 1974 and Government Memorandum No. 73270-XIII/74-8, Commercial Taxes and Religious Endowments Department, dated 6th October 1974:

(*b*) if so, the reason therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

தஞ்சாவூர் மாவட்டம் சத்திரத் துறையின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டம் சத்திரத் துறையின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குச் சேரவேண்டிய ஓய்வூதியத் தொகை நிலுவைகள், வருவாய்த் துறையின் 19-4-1974 ஆம் நாளிட்ட 1714 ஆம் எண்ணுள்ள அரசாணைக்கிணங்கவும், வணிக வரிகள்—சமயக்கட்டளைகள் துறையில் 6-10-1974 ஆம் நாளிட்ட 73270-XIII/74-8-ஆம் எண்ணுள்ள அரசுக் குறிப்பாணைக் கிணங்கவும் இன்னும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) இப்பொருள்பற்றி அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ), (இ) & (உ) திங்கள் ஒன்றுக்கு ரூ. 60 என்ற வீதத்தில் தனிப்பட்ட ஓய்வூதியம் 1-10-1974 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. 1-10-1974-க்கு முன்புள்ள கால அளவிற்கான ஓய்வூதிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பது பற்றி அரசு முனைப்பாக ஆய்வு செய்து வருகிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-30)